# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 27 புதன்கிழமை 14.08.2024 | கதிர் 331







# நாளை காலை நியமனப்பத்திரம் தாக்கல்
# கொழும்பில் பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பு

## விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் நடைமுறை

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உள்ள வேட்பாளர்களுக்கு கட்டுப்பணம் செலுத்த தேர்தல்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட கால எல்லை இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்துள்ளதாக நிலையில், நாளை காலை 9 மணிமுதல் 11 மணிவரை வேட்பாளர்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்ய முடியும். 11 மணிமுதல் 11.30 மணிவரை தமது ஆட்சேபனைகளை தெரிவிக்க முடியும்.

நாளைய தினம் வேட்புமனுத் தாக்கல் இடம்பெற இருப்பதால் தேர்தல் அலுவலகம் அமைந்துள்ள இராஜகிரிய பகுதியில் விசேட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று கொழும்பில் வேட்பாளர்கள் வருகைதரும் பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

2▶

# ரணிலை மீண்டும் ஜனாதிபதியாக்க புதிய கூட்டணி இன்று உதயமானது

## தலைவராக அநுர பிரயதர்சன யாப்பா தெரிவு



ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் புதிய கூட்டணி இணைந்து பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற பெயரில் புதிய முன்னணி ஒன்று இன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக்கூட்டணியின்செயற்குழு உறுப்பினர்கள் அறிவிக்கப்பட்டுள்ளதோடு, இந்த கூட்டணியின்உத்தியோகபூர்வ இணையத்தளமும் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு இன்று காலை கொழும்பு பத்தரமுல்ல, வோட்டர்ஸ் எட்ஜ் ஹொட்டலில் நடைபெற்றது.

இதன்போது கூட்டணியின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த

2▶

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட 40 பேர் கட்டுப்பணம் செலுத்தினர்

## பெரும்பாலானவர்கள் சுயேச்சை வேட்பாளர்கள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்துவதற்கான நடவடிக்கைகள் இன்று நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடைந்தது. இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக 40 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்துவதற்கான நடவடிக்கைகள் ஜூலை 26 ஆம் திகதி ஆரம்பமாகி இன்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது.

இதேவேளை, 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்குப்பதிவு நடைபெறும் திகதிகளை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இதன்படி, தபால் மூல வாக்குச் சீட்டுக்களை

2▶

# கையொப்பமிட்டார் நாமல்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ வேட்பு மனுவில் கையொப்பமிட்டுள்ளார்.

விஜேராமவில் உள்ள மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நாமல் ராஜபக்ச வேட்பு மனுவில் கையொப்பமிட்டார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய நாமல் ராஜபக்ஷ சார்பில், கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் இன்று முற்பகல் கட்டுப்பணம் செலுத்தினார்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் பெருமளவுக்கு இந்சிகழ்வில் கூடியிருந்தனர்.

# வேட்புமனுவில் ரணில் கையொப்பம்



வரும் ஜனாதிபதித் தேர்தலில்போட்டியிடுவதற்கான வேட்புமனுவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று கையொப்பமிட்டார்.

இது தொடர்பான நிகழ்வு கொழும்பு, பிளவர் வீதியிலுள்ள அவரது அரசியல்அலுவலகத்தில் நடைபெற்றது.

## ரணிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அழகியவண்ண செயற்குழுவின் 21 உறுப்பி னர்களது பெயர்களை அறிவித்தார். அதனையடுத்து, கூட்டணியின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அநுர ப ிரியதர்ஷன யாப்பாவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவும் கூட்டணியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தனர்.

அதனைதொடர்ந்து, நாடாளுமன்ற உறுப்பினர்களான துமிந்த திஸாநாயக்க, நிமல் சிறிபால டி சில்வா, அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோர் உரையாற்றினர்.

இதன்போது நிமல் சிறிபால டி சில்வா உரையாற்றுகையில், "இனி எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் குடும்ப ஆட்சிக்கு இடமளிக்காத ஒரு ஜனநாயக கூட்டணியை நாங்கள் உருவாக்கியுள்ளோம். அதனால் எதிர்வரும் பொது தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியாக இருந்தாலும் சரி, ஐக்கிய மக்கள் சக்தியாக இருந்தாலும் சரி, ஜே.வி. பியாக இருந்தாலும் சரி, யார் வேண்டுமானாலும் எமது கூட்டணியில் இணையலாம். அதற்காக கூட்டணியின் கதவு எந்நேரமும் திறந்தே இருக்கிறது" என்றார்.

இந்த நிகழ்வில் கூட்டணியின் தலைவரான அநுர பிரியதர்ஷன யாப்பா உரையாற்றுகையில், "தற்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள செயற்குழு கூடி, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு தேர்தலில் ஆதரவளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவரது வெற்றிக்காக கூட்டணி பாடுபடும்" என்று தெரிவித்தார்.

## நாளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸார் வழங்கியுள்ள போக்குவரத்து வழிமுறைகளை பின்பற்றுமாறு பொலிஸ் ஊடகப்பிரிவு கூறியுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. வழமையைவிட அதிகமான வேட்பாளர்கள் களமிறங்கியிருப்பதால், நிலைமைகளைக் கட்டுப்படுத்த அதிகளவு பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட வுள்ளார்கள்.







## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிடுத்தல் மற்றும் தபாலுக்கு வழங்குதல் 26.08.2024 அன்று இடம்பெறும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, மாவட்ட செயலகம், தேர்தல் அலுவலகங்கள், பொலிஸாருக்கு தபால் மூல வாக்குப்பதிவு செப்டம்பர் 4 ஆம் திகதி இடம்பெறும். தபால் மூலம் வாக்களிக்கக் கோரிய ஏனைய தரப்பினருக்கு செப்டம்பர் 5 மற்றும் 6 ஆகிய இரண்டு நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

குறியிடப்படாத தபால் வாக்குகளுக்கான மறுகுறிப்பு திகதி செப்டம்பர் 11 மற்றும் 12 ஆகிய திகதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# ரணில் தேர்தலில் போட்டியிட தடை கோரி வழக்கு தாக்கல்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தகுதியற்றவர் என தீர்ப்பளிக்குமாறு கோரி சட்டத்தரணி ஷான் ரணசூரிய , உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை, உயர்நீதிமன்றில் புதன்கிழமை தாக்கல் செய்துள்ளார்.

அரசியலமைப்பை ஜனாதிபதி வேண்டுமென்றே மீறியுள்ளமையினால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ரணில் விக்ரமசிங்க தகுதியற்றவர் என மனுதாரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

செப்டம்பர் மாதம் 21ம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக போட்டியிட ரணில் விக்ரமசிங்க தகுதியற்றவர் என குறிப்பிட்டுள்ள மனுதாரர் ஆகையால், இடைகால தடையுத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறு மனுவின் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார்




# இரண்டாம் தவணை விடுமுறை வெள்ளிக்கிழமை ஆரம்பம்

இந்த ஆண்டுக்கான இரண்டாம் தவணை பாடசாலை கற்கைகள் நிறைவடைவது தொடர்பாக கல்வி அமைச்சினால் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, பாடசாலைகளின் இரண்டாம் தவணை ஆகஸ்ட் 16ம் திகதி வெள்ளிக்கிழமையுடன் முடிவடைகிறது.

இதேவேளை, மூன்றாம் தவணைக்கான கல்வி செயற்பாடுகள் எதிர்வரும் ஆகஸ்ட் 26ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியுடன் திலகரத்ன டில்ஷானும் இணைந்தார்





எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்துக்கு ஆதர வளிக்கும் நோக்கில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் திறமையான சகலதுறை ஆட்டக்காரரான திலகரத்ன டில்ஷான் இன்று ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்துகொண்டார் என்று அக்கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ஏறக்குறைய 17 வருடங்கள் இலங்கை கிரிக்கெட் அணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய அவர், சிறிது காலம் அதன் தலைவராகவும் கடமையாற்றினார்.

# மோ. சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாத்தறை, திக்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாத்தறை - கதிர்காமம் வீதியில் மாலியத்த பிரதேசத்தில் நேற்று இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திக்வெல்லவிலிருந்து மாத்தறை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் சென்றுகொண்டிருந்த மாடு ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிள் செலுத்துநர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

கொட்டகொட பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். சடலம் மாத்தறை வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திக்வெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# மிதி வெடி

நாட்டில என்ன நடக்குது - நடக்கப் போகுது எண்டு ஒண்டுமா விளங்குதில்லை....

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுக் கிடக்கு.. நானும் ஜனாதிபதி தான் எண்டு கண்டவன் நிண்டவன் எல்லாம் காசு கட்டிப் போட்டு நிக்கிறான்... இது வரை 36 பேர் கட்டுப்பணம் கட்டியிருக்கினமாம் பாருங்கோ.... இன்னும் எத்தின பேர் கட்டப் போகினமோ தெரியேல்ல..

இதில பம்பல் என்ன தெரியுமே?

தனி நாடு கேட்ட நாங்கள் இப்ப காணி அதிகாரமும் 13 மாவது தாங்கோ எண்ட நிலமைக்கு வந்து நிக்கிறம் பாருங்கோ.... ஆனா நான் ஒண்டு மட்டும் சொல்லுறன் எத்தின பேர் ஜனாதிபதி “எலக்சன்” கேட்டாலும், ஆரெவர் ஜனாதிபதியா வந்தாலும் எங்களுக்கு ஆகப்போறது ஒண்டுமில்லை.

இன்னும் இருக்குப் பாருங்கோ.... செப்ரெம்பர் 21 ல ஜனாதிபதித் தேர்தல் நடந்து, ஆரோ ஒராள் ஜனாதிபதியா வந்த பிறகு உங்களுக்கு உது விளங்கும்... சரி இப்ப ஆர் ஜனாதிபதியா வருவார் எண்டு நீங்கள் நினைக்கிறியள்?

புலிகள் கட்டின வீடு - எங்களுக்கெண்டு இருந்த ஒரேயொரு கூ(ட்)டு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்ப இருந்த இடந்தெரியாமல் போயிற்றுது. முந்தியெண்டா... பொல்லோ... தடியோ கூட்டமைப்பு ஆரை நிப்பாட்டினாலும் சனம் “வோட்டு” போட்டது ஒரு காலம். அத மாதிரி யாருக்குப் போடுறதெண்டு கூட்டமைப்பு கை காட்டினா எங்கட சனங்களும் மறுபேச்சில்லாமல் போட்டது. ஆனா இந்த முறை உவையைக் கணக்கெடுக்கிற நிலமையில சனம் இல்லப் பாருங்கோ.....

எல்லாத்தையும் விடத் தாங்கள் சொன்னால் சனம் போடும் எண்டு சொல்லி - அது தான் தங்கட பேரம் பேசும் சக்தி எண்டு படங்காட்ட வெளிக்கிட்டிருக்கினம். ஆனா என்ன நடக்கும் எண்டு நினைக்கிறியள்...?

சுயாட்சியும், காணி அதிகாரமும் தந்து 13 ஐ நடைமுறைப்படுத்த ஒத்துக் கொள்ளுற ஆளுக்குத் தங்கட ஆதரவு எண்டு அறிவிச்சு அதைவச்சு அரசியல் செய்ய வெளிக்கிடுகினம்.... ஆனா தலைகீழாத் தான் நடக்கும் எண்டு நான் சொல்லுறன். உந்தப் பொதுவேட்பாளர் விளையாட்டோட நாங்கள் ரெண்டு விதமாக அடி வேண்டப் போறம் பாருங்கோ.... ஒண்டு தமிழருக்குத் தலைமை தாங்கிற அருகதை இப்ப ஆருக்குமே இல்லை : ஆர் என்ன சொன்னாலும் நாங்கள் நினைச்சபடி தான் வாக்குப் போடுவம் எண்டு சனம் நிஷரூபிக்கப்போகுது... ரெண்டாவது... சுயாட்சி, காணி அதிகாரம் எண்டு சொல்லி வாக்குக் கேட்ட “பொதுவேட்பாளர்” தோத்துப்போனால் தமிழ் மக்களிடம் உரிமைக் கோசம் எண்ட ஒண்டு இப்ப இல்லை... அபிவிருத்தி செய்யுறம் எண்டு வாறது ஆரோ அவரைத் தானே மக்கள் ஆதரிக்கினம் எண்டு வெளியில பிம்பம் ஒண்டைக் காட்டுறது தான் உந்த பொதுவேட்பாளர் போட்டவையின்ர பிரதான நோக்கமாம்..... என்னவோ நடக்கிறதைக் கண்டு கொள்ளுவம்...

ஆனா ஒண்டு மட்டும் உண்மை பாருங்கோ.... வடக்கு - கிழக்கில உள்ள தமிழ் மக்களிண்ட வாக்குத் தான் ஜனாதிபதியைத் தீர்மானிக்கப் போகுது எண்டு பிரதான வேட்பாளர் மாரே கடுமையா நம்புகினமாம்...

மற்றப் பக்கத்தால இப்பத்த ஜனாதிபதி மொட்டுக் கட்சியை வெட்டி ஓடினதுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேணும் எண்டு தான் முன்னாள் ஜனாதிபதியின்ர மகனை இறக்கி இருக்கினமாம். முன்னைய கணக்கின் படி மொட்டுக்கு விழுகிற வாக்கையும் சேர்த்துப் பாத்தா ஐயா சிம்பிளா வருவார் எண்ட நிலமை இருந்ததாம்... இப்ப நாடாளுமன்றத்தில மொட்டை வெட்டி ஓடுறவருக்குப் படிப்பிக்க வேணும் எண்டு தான் இங்கால “புத்திர வியூகம்” அமைக்கப்பட்டிருக்குதாம்.... அதால தெற்கு வாக்கை நம்பி மட்டும் இருக்கேலாது எண்டதால தான் “ஐயா” இப்ப அடிக்கடி வடக்குக்கு வந்து போறாராம்....

அதை விட இன்னுமொண்டு தெரியுமே.... சிதைச்சுச் சின்னா பின்னாமா சிறப்புப் பட்டம் எடுத்தவரேல்லே அவர், இங்க வடக்கிலயும் எல்லாரையும் தனினத்தனியாச் சந்திச்சு தன்ர விளையாட்டக் காட்டத் தொடங்கியிருக்கிறாராம்.... இவ்வளவும் ஏன்? தமிழ்த் தேசியத்தையும், தன்னுடைய தனிமையையும் வச்சு வாக்கு வேட்டையில ஈடுபட்ட அம்மணியார், ஜனாதிபதித் தேர்தலில பொது வேட்பாளராக் களமிறங்கப் போறன் எண்டு அறிவிச்சு ரெண்டாம் நாள் “ஜெட்விங்”ல போய் தனியாச் சந்திச்சுக் “கொம்ரமைஸ்” ஆகிட்டாவாம்.... இப்பிடித் தான் எங்கட தலைவர் மார் எல்லாற்றை நிலமையும் இப்ப....

தங்களுக்காக - தாங்கள் சொல்லிச் சனம் வாக்குப் போடாது எண்டு தெரிஞ்சும், பொது வேட்பாளரால ஆகப் போறது ஒண்டுமில்லை எண்டு தெரிஞ்சும் “அவையள்” அதானுங்கோ “அயல்வீட்டுக்காரர்” போடுற தாளத்துக்கு ஆடுறது ஏனெண்டு நினைக்கிறியள்?

“எரியிற வீட்ல பிடுங்குறது மிச்சம்” எண்டுமாப் போல தனக்குத் தனக்கெண்டு வெளிச்சதோட “செட்டில்” ஆகிறதுதான் பிளான்....

அப்பப் பாருங்கோவன்...... சோழியன் குடுமி சும்மா ஆடாது..!

நரமுனி

# கோடைகால கொண்டாட்டமாக

# கனடா தமிழர் தெருத் திருவிழா

## 24, 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது










கனடிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் ஆண்டுதோறும்நிகழும்உலகின்மிகப்பிரம்மாண்ட தமிழர் தெருத்திருவிழாவான தமிழர் தெருவிழா இந்த ஆண்டு ஒரு தசாப்தகால கொண்டாட்டமாக மார்க்கம் வீதியை ஆகஸ்ட் மாதம் 24ஆம் 25ஆம் திகதிகளில் அலங்கரிக்க உள்ளது.

2015இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த கொண்டாட்டம் காலப்போக்கில் தமிழர்களின் தனி அடையாளமாகவே மாறிப்போனது. கடந்த ஆண்டு வரலாறு காணாத மக்கள் கூட்டத்தால் நிறைந்த தமிழர் தெருவிழாவில் அண்ணளவாக 2,75,000 பேர் ஆர்வமாக கலந்துகொண்டனர். இந்த ஆண்டு தமிழர் தெருவிழா 3,00,000ற்கும் அதிகமான மக்களை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மொழி சார்ந்த பெருமையும் தனித்துவமும் உலகின் மிக நீண்ட கால கலை பண்பாட்டு நாகரீக வரலாறும் கொண்ட எம்மவர்களின் கலை கலாச்சாரம் உணவுப் பழக்கங்களை ஒரு பன்முகத்தன்மை வாய்ந்த நாட்டில் உள்ள அனைவரும் அறியும் வண்ணம் ஊர் கூடி கொண்டாடும் இந்த தமிழர் தெருவிழாவில் ஒவ்வொரு ஆண்டும் புதுமையான சிறப்பான பல அம்சங்கள் இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில் பத்தாவது ஆண்டாக நிகழவிருக்கும் இவ்வாண்டு கொண்டாட்டத்தில் நம்மவர் பெருமை கூறும் பல அம்சங்கள் இடம்பெற உள்ளது. அவற்றுள் மிக முக்கியமானது தாயகத்தில் உள்ள எமது உறவுகளின் சிறுதொழில் உற்பத்திகளை ஊக்குவிக்கவும் சந்தைப்படுத்த உதவவும் என ஒரு காட்சியரை உருவாக்கப்பட உள்ளது.

இலங்கையில் தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு பிராந்தியங்கள் சிறுதொழில் உற்பத்திகளில் சிறந்த உற்பத்தியாளர்களைக்கொண்ட வளம்மிக்க பிராந்தியங்கள் என்றாலும் யுத்தத்தின் பின்னர் அவர்களின் உற்பத்தி திறனிலும் சந்தைப்படுத்தலிலும்பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த உற்பத்திப்பொருட்களை சர்வதேச சந்தையில் எடுத்துச்செல்லும் முகமாக இலங்கையில் வடக்கு தொழில்துறை சம்மேளனத்துடன் இணைந்து இந்த உள்ளூர் உற்பத்திகள் காட்சியறையை தமிழர் திருவிழாவில் உருவாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இதன்போது வடக்கு தொழில்துறை சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள உள்ளனர். ஆரோக்கியமான கூட்டுமுயற்சியில் ஈடுபட விரும்புபவர்கள் தமிழர் தெருவிழாவில் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளலாம்.

தமிழர்களாகநாங்கள்பெருமைப்பட்டுக்கொள்ள பல வரலாற்று நிகழ்வுகள் உண்டு. அவற்றில் பலவற்றை நம் இளைய தலைமுறையினருக்கு கொண்டு சேர்க்க வேண்டிய கடப்பாடையும் தமிழர் தெருவிழா தன் நிகழ்ச்சிநிரல்களில் ஆண்டாண்டாக தொடர்ந்து வருகின்றது.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் கப்பல் கட்டுமானத்தில் சிறந்த இடமாக திகழ்ந்தது. நம் முன்னோர்கள் திறமையான கப்பலோடிகள் என்பதோடு அவர்கள் தாமாகவே பாய்மர படகுகளை உருவாக்கினர். இந்த கட்டுமான அழகு மேற்கத்தேய கடலோடிகளையும் ஈர்த்தது. இந்த வரலாற்றுக்கு சான்றாக இருக்கும் ஒரு பெயர்தான் அன்னபூரணி அம்மாள் கப்பல். 1937 ஆம் ஆண்டு, ஐந்து வீரத் தமிழ் கடலோடிகள் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவுக்கு தாம்செய்த பாய்மாரைக்கப்பலில் பயணம்செய்தனர். எந்த நவீன உபகரணங்களும் இல்லாமல், அவர்கள் ஒரு எளிய பாய்மரக் கப்பலில் உலகின் மிக ஆபத்தான அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்தனர். 10 ஆவது ஆண்டு தமிழர்தெருவிழாவில் இந்த அன்னபூரணி அம்மாள் கப்பலின் நெடிய வரலாற்றுப்பயணமும் அதன் 27 வருட கால செயற்பாடுகளும் காட்சியப்படுத்தப்பட உள்ளது. இதில் மிக முக்கியமாக அன்னபூரணி அம்மாள் பாய்மாரைக்கப்பல் மாதிரி ஒன்றும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட உள்ளது. வரலாறுகளை மறக்கும் எந்த இனமும் தன்னை தகவமைத்துக்கொள்ள முடியாது. நாம் அனைத்து துறைகளிலும் அனைத்து வகையிலும் சிறந்தவர்களாகவே இருந்து இருக்கின்றோம் என்பதை மீண்டும் ஒருமுறை தமிழர் தெருவிழா பறைசாற்றவுள்ளது.

இவற்றை விடவும் இந்த ஆண்டு பின்னணிப்பாடகர் ஸ்ரீனிவாஸ் உற்பட சரிகமபா புகழ் மாதுலானி, ஜீவன், தாயக பாடகர் கந்தப்பு ஜெயந்தன் இவர்களோடு கனடிய பாடகர்கள், கலைஞர்கள் என அனைவரையும் உள்ளடக்கிய கலை, இசைக்கொண்டாட்டங்களும் அரங்கேறவுள்ளது. நம் கலை மிக விரிந்தது. பறை, சிலம்பாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம், கும்மி, பொய்க்கால் குதிரை, பரதநாட்டியம், நாட்டுக்கூத்து என ஆரம்பித்து நவீன கலை நடன அம்சங்களும் தமிழர் தெருவிழாவில் இடம்பெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

இவைமட்டுமல்லாது கனடாவில் உள்ள தமிழர்களின் வியாபார சாவடிகள், உணவுச்சாலைகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், தன்னார்வ நிறுவனங்கள் என நூரிற்கும் மேற்பட்ட சாவடிகளையும் இவ்வாண்டு தெருவிழாவில் எதிர்பார்க்க முடியும். குழந்தைகள், இளைஞர்கள் என அனைவரும் மறக்க முடியாத அனுபவத்தை பெறுவதற்கான விளையாட்டு திடலும் தமிழ்ரதெருவிழாவில் ஒரு அம்சமாக அமையவுள்ளது.

உலகின் ஆதிக்குடிகளான தமிழர்கள் காதலும், வீரமும், கொண்டாட்டமும் கொண்ட நீண்ட நெடிய வரலாற்றை கொண்டவர்கள். உலகிற்கு பலவகைகளில் கலையையும் பண்பாட்டையும்கொடுத்தவர்கள். தமிழர்தெருவிழா தமிழர்களின் பெருமையாக இவ்வாண்டும் சிறந்த கோடைகாலகொண்டாட்டமாக இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. நம் மொழி நடந்து வந்த பாதையில் ஒருமுறை நடந்து பார்க்க அனைவரையும் தமிழர் திருவிழா அழைக்கின்றது.

# ரணிலுக்கு ஆதரவளிக்க முடியாது பொது வேட்பாளருக்கே ஆதரவு

## தூது வந்த வஜிரவிடம் தெரிவித்த விக்னேஸ்வரன்

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக களமிறங்கும்ரணில்விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்குமாறு நேரில் விடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்த தமிழ் மக்கள் கூட்டணியின் செயலரும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், தனதும்கட்சியினதும்ஆதரவு தமிழ்பொது வேட்பாளருக்கே வழங்கப்படுமெனவும் கூறியுள்ளார்.

விக்னேஸ்வரனின் கொழும்பிலுள்ள இல்லத்திற்கு நேற்று செவ்வாய்க்கிழமை சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன விடுத்த கோரிக்கையையே விக்னேஸ்வரன் நிராகரித்துள்ளார்.

விக்னேஸ்வரனை சந்தித்த ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக களமிறங்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக நாளை மறுதினம் 16 ஆம் திகதி பல அரசியல் கட்சிகளும் அமைப்புக்களும் பொது ஆவணம் ஒன்றில் கைச்சாத்திடவுள்ளன என்றும், அதில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் சித்தார்த்தன், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை சேர்ந்த அங்கஜன் இராமநாதன் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியனவும் கைச்சாத்திட இணங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

“இந்த பொது ஆவணத்தில் உங்களின் பெயரும் கட்சியும் இடம்பெற வேண்டுமென நாம் விரும்புகின்றோம்” என்றும் வஜிர அபேவர்த்தன, “நீங்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்து அந்தப் பொது ஆவணத்தில் கைச்சாத்திட வேண்டும்” என்று விக்னேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்தார்.

வஜிர அபேவர்தனவின் இந்தக் கோரிக்கையை உடனடியாகவே நிராகரித்த நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், “ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எனக்கு ஏற்கனவே பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். ஆனால் எதனையும் அவர் நிறைவேற்றவில்லை. 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட நிலையில் மீண்டும் பறித்தெடுக்கப்பட்ட அதிகாரங்களையாவது ரணில் விக்கிரமசிங்க வழங்கியிருந்தால் அவருக்கு எமது நல்லெண்ணத்தை காட்டியிருக்க முடியும்” என்று சுட்டிக்காட்டினார்.

“எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாத ரணில் விக்கிரமசிங்கவுக்கு எமது ஆதரவை வழங்க முடியாது. நீங்கள் வருவதற்கு சற்று முன்னர்தான் தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனும் அவரது குழுவினரும் என்னை வந்து சந்தித்து சென்றனர்” என்று தெரிவித்த விக்னேஸ்வரன், “எனதும் எனது கட்சியினதும் ஆதரவு தமிழ் பொது வேட்பாளருக்கே வழங்கப்படும்” என்றும் குறிப்பிட்டார்.

# ராஜபக்ஷக்களிடமிருந்து மொட்டு தலைமையை கைப்பற்றுவோம்

## ரணிலுக்கு ஆதரவளிக்கும் குழுவினர்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அதிகாரத்தை தாங்கள் கைப்பற்றவுள்ளதாகவும், சிறுபான்மை ஆதரவாளர்கள் கட்சியின் உரிமையை கோருவது தவறெனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் மொட்டு அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்த அவர், தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் குழுவால் மொட்டின் அதிகாரம் கைப்பற்றப்படும் எனவும் தெரிவித்தார்.

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த சுமார் 100 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்” என்று சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் எச். எம்.சந்திரசேன, இதனால் பெரும்பான்மை தம்மிடம் உள்ளது என்றும், அதனால் சிறுபான்மை ஆதரவு குழுக்கள் கட்சியின் உரிமையை கோருவது தவறானது என்றும் தெரிவித்துள்ளார்.

தாங்கள் தற்போது தனி கூட்டணியாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்திருப்பதாகவும் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம். சந்திரசேன, அந்த கூட்டணியின் மூலம் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அதிகாரம் கைப்பற்றப்படும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர், புதிய கூட்டணியொன்றை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளதுடன் அதன்மூலம் எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிடவும் தீர்மானித துள்ளனர்.



# கலாசாலையில் அனைத்துலக இளையோர் நாள் நிகழ்வுகள்





அனைத்துலக இளையோர் நாளைச் சிறப்பிக்கும் நிகழ்வுகள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இன்று புதன்கிழமை ஒன்றுகூடலின் போது இடம்பெற்றன.

விசேடகல்வி நெறி ஆசிரிய மாணவி சாஜகான் பாத்திமாநுஸ்லா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் விநோதினி சிறீமேனன் - இளையோரை வழிப்படுத்துவதில் ஆசிரியர்களின் பங்களிப்பு என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினார். கலாசாலையின் சிரேஸ்ட விரிவுரையாளர் சின்னையா மனோகரன் அதிதி அறிமுகவுரையை ஆற்றினார்.

ஆங்கில நெறி ஆசிரிய மாணவி டேவிட் லிஜானி இளையோரும் சமூகமும் என்ற பொருளில் மாணவர் உரையை வழங்கினார். கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார். அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்ட சி. விநோதினி கலாசாலைச் சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.







## குடிசன வீட்டு வசதிகள் கணக்கெடுப்பு குறித்த செயலமர்வு கிளிநொச்சியில்







குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பு கணக்கெடுக்கும் 3ம் கட்ட பணிகள் தொடர்பான செயலமர்வு இன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

நாடளாவிய ரீதியில் 15வது குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பு கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அதன் மூன்றாம் கட்ட பணிகள் நடைபெறவுள்ள நிலையில் இன்று நிர்வாக உயர்மட்ட உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

காலை ஒன்பது முப்பது மணிக்கு தனியார் விருந்தக மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த செயலமர்வில் புள்ளிவிபரவியல் மற்றும் தொகைமதிப்பு திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் குமாரி பிரேமலதா, மாவட்டச் செயலாளர் எஸ்.முரளிதரன், உதவி மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலரும் பங்கேற்றனர்.






## சிகை அலங்காரம் குறித்த செயலமர்வு

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப்பிரிவில் உள்ள பாடசாலை மாணவர்களின் சிகை அலங்காரம் தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்கள் மற்றும் கடை உரிமையாளர்கள் உடனான கலந்துரையாடல் கூட்டம் இன்று உதவி பிரதேச செலாளர் நஹிஜா முசாபிர் தலைமையில் நேற்று இடம்பெற்றது

இதில் கோட்டக்கல்வி அதிகாரி எம் எச் எம்.றஸ்மி சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர் ஏ.எம்.கஸ்பியா வீவி சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர். எஸ். சியாத் கலாசார உத்தியோகத்தர் எம். ஜஃபர் மகளிர் அபிவிருத்திகள உதவியாளர் எஸ் எம் எஸ். பர்ஹானா உளவள துணை உதவியாளர் எம்.றனீஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

## திருக்கோவிலில் மாவட்ட மொழித் தினப் போட்டி

அகில இலங்கை தமிழ்மொழித்தின போட்டிக்கான கல்முனைக்கல்வி மாவட்ட நிலைப்பன போட்டி நாளை வியாழக்கிழமை திருக்கோவில் வலயத்திலுள்ள தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது .

திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா.உதயகுமார் தலைமையில் நடைபெற இருக்கின்ற இந்த நிகழ்வில் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமார், கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம், அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றஹ்மத்துள்ளா ஆகியோர் கலந்து கொள்வார்கள் .

காலை 8 மணிக்கு தமிழ் மொழி தின பண்பாட்டு ஊர்வலம் இடம்பெற இருக்கின்றது. அதன் பிறகு ஏனைய நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாக இடம்பெறும்.

## பின்னவல - கித்துல்கல சுற்றுலா அபிவிருத்தி

*பின்னவல, கித்துல்கல சுற்றுலா வலயத்தை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.*

*2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட தீர்மானம்பின்னவல கித்துல்கல சுற்றுலா வலயத்தின் அபிவிருத்திக்காக சுற்றுலா மற்றும் காணி அமைச்சுக்கு 750 மில்லியன் ஷரூபாவை ஒதுக்கியுள்ளது.*

*அதன் கீழ் அடையாளம் காணப்பட்ட பல உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்துவதற்காக தேசிய திட்டமிடல் துறையால் நியமிக்கப்பட்டுள்ளன.*

*இதன்படி பின்னவல கித்துல்கல சுற்றுலா வலய அபிவிருத்தித் திட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி மற்றும்வீடமைப்பு அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.08.2024இல் வெளியிடப்பெற்றது.